[26th March 1959

Development of histrionic arts

* 1026 *Q.*—Sri A. A. RASHEED : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether there is any proposal to open a training school for the development of histrionic arts; and

(*b*) if so, when?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

Sri A. A. RASHEED : May I know whether there is any school teaching the histrionic art in our State and if so, whether any aid or grant is given to it?

The Hon. Sri C. SUBRAMANIAM : I do not think any institution is functioning as such just now. But I suppose in Kalakshetra something is being done on these lines but I am not quite sure about it.

Sri S. NAGARAJA MONIGAR : ஸார். இந்த சினிமாக்கலை முதற் கொண்டு நாடகக் கலையில் ஆரம்பமாகிறது என்பதால், நாடகக் கலையைப் பற்றிய வரையில் தலைவர்களும் மற்றும் மந்திரிகளும் நாடகத் தந்தையான திரு. சம்பந்த முதலியார் அவர்களை அடிக்கடி பாராட்டிப் பேசி வருவதாலும். . . .

Mr. SPEAKER : This is question hour. The hon. Member must put a question. What has Sambanda Mudaliar to do with this? Why is his name dragged in here? What has cinema got to do with this? He must put a question about drama. Otherwise, I will rule the question out of order.

Sri S. NAGARAJA MONIGAR : நாடகக் கலைக்கு அவர்கள் மிகவும் முக்கியமானவர்கள், நாடகக் கலையைப்பற்றி அரசாங்கம் பாராட்டுகிறார்கள் என்று குறிப்பிட்டுச் சொல்வதற்காகத்தான் சொன்னேன்.

Mr. SPEAKER : If the hon. Member does not listen to me, I will pass on to the next question. This is not an occasion for him to make a speech about drama.

Sri S. NAGARAJA MONIGAR : நான் கேள்வியை முடிக்கக்கூட விடுவதில்லை. ஒவ்வொரு முறையிலேயும் எனக்கு இம்மாதிரித்தான் செய்யப்படுகிறது.

Mr. SPEAKER : I will give him one more chance if he wants. That is all.

Sri K. ANBAZHAGAN : நாடகக் கலை வளர வேண்டுமானால் அந்தத் துறையிலே அனுபவம் பெற எல்லா பள்ளிகளிலும் இந்தக் கலையில் மாணவர்களுக்குக் கொடுக்கப்படும் சந்தர்ப்பமே மிகச் சிறந்த சாதனமாக இருக்கும் என்ற காரணத்தினால், இதற்கென்று தனியாக ஒரு பள்ளி வைப்பதை விட, எல்லாப் பள்ளிகளிலும் நாடகம் நடத்த அவர்களுக்கு உதவி செய்ய அரசாங்கம் முன்வருமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : தனியாக சர்க்கார் ஒரு பள்ளி ஆரம்பிக்கும் உத்தேசம் இல்லை. இப்போதும் பள்ளிகளில் நாடகம் நடத்த ஊக்கம் அளிக்கப்பட்டு வருகிறது. அதுவும் கல்லூரிகளில் நாடகக் கலையை உயர்த்த ஒரு சங்கம் ஏற்படுத்தி, அந்தச் சங்கமும் நல்ல முறையில் செய்து வருகிறது. அதற்கு சர்க்காரும் உதவி செய்திருக்கிறது